**16** வருட சிறந்த மருத்துவ சேவையில்

# deepam

## speciality hospital

**VALAPADI & SALEM**




## இனி நானும் தாய் தான்

www.deepamhospital.com



**Dr. A.**அகிலாம்பாள் கடந்த 16 வருடங்களாக மருத்துவதுறையில் தன் சேவையை செய்து வருகிறார். குழந்தையின்மை தொடர்பான பிரச்சனைகளுடன் நிறைய பேர் போராடுவதைக்கண்டு அவர்களுடைய பிரச்சனைகளை போக்குவதற்காக இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியில் கருவுருவாக்கம் பற்றிய சிறப்பு மருத்துவத்தில் பட்டம் பெற்று அமெரிக்கன் ஏஸ்தடிக் அசோசியேஷனில் சிறப்பு பயிற்சி பெற்றது அவருடைய துறைசார்ந்த தெளிவிற்கும், திறமைக்கும் மேலும் ஒரு தனித்துவத்தைச் சேர்த்தது.

சேலத்திலிருக்கும் இவர்களின் ஒரு பிரிவு மகளிர் மருத்துவம் சார்ந்த அனைத்து பிரச்சனைகளுக்கும் ஒரு தீர்வு தரக்கூடிய ஓர் இடம் ஆகும். இங்கு எல்லா விதமான சிகிச்சைகளும் **Dr. A.**அகிலாம்பாள் அவர்களின் தனிப்பட்ட அக்கறையுடன் ஒவ்வொருவருக்கும் சிகிச்சை அளிக்கப் படுகிறது.

**Dr. A.**அகிலாம்பாள் தீபம் கருத்தரிப்பு சிகிச்சை மையத்தில் குழந்தையின்மை சிகிச்சை மேற்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் இவர் ஒரு நம்பிக்கை விளக்காவார்.

## Dr. A.அகிலாம்பாள்

MBBS., DGO., D.Lap., DRM (GERMANY).,
MRM (UK) Fellowship in Cosmetic Gynaecology
குழந்தையின்மை மற்றும் லேப்ராஸ்கோப்பிக்
அறுவை சிகிச்சை நிபுணர்



**Dr. K.**சுரேஷ்குமார் தனது மருத்துவப்படிப்பினை கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரியில் 1987 - 1993 வரை பயின்றார். அறுவை சிகிச்சை நிபுணர் பட்டபடிப்பை 1997 - 2000த்தில் ஸ்டேன்லி மருத்துவ கல்லூரியில் பயின்றார். பின்பு சென்னை அப்போலோ மருத்துவமனையில் பிளாஸ்டிக் அறுவைசிகிச்சை பிரிவில் ஒரு வருடம் பயிற்சி பெற்றார். பின்பு சென்னையில் பிரபலமான பல மருத்துவமனையில் பயிற்சி பெற்றார்.

சிறுதுளை அறுவை சிகிச்சை பயிற்சியினை **V.G.**மருத்துவமனை கோவையில் பயின்றார் மற்றும் கொச்சின் Sun Rise மருத்துவமனையிலும் பயின்றார்.

HYSTEROSCOPY TRAINING, புனேவிலும் பிரபல இரான் மருத்துவ நிபுணர். J. ஒசாமாவிடம் பயிற்சி பெற்றார். Endoscopy training veterinary CMU-வில் பயிற்சி பெற்றார்.

## Dr. K.சுரேஷ் குமார்

MBBS., MS., D.Lap (Laparoscopic Surgeon)
பொது மற்றும் லேப்ராஸ்கோபிக்
அறுவை சிகிச்சை நிபுணர்

## கருத்தரிப்பு மையத்தின் சிகிச்சைகள்

ICSI (ஐ.சி.எஸ்.ஐ)

பிளாஸ்டோசிஸ்ட் (Blastocyst)

IMSI (ஐ.எம்.எஸ்.ஐ)

கருமுட்டையை கர்ப்பப்பையில் செலுத்துதல் (Embryo Transfer-ET)

கருவாக்குதல்

IVF குறித்த உங்கள் பயங்கள் யாவும் தேவையற்றவை

கருவினை தனியே உருவாக்கி பெண்ணின் கர்ப்பப்பையில் உட்செலுத்துதல் **(IVF - ET)**

## தீபம் வழங்கும் சிகிச்சைகள்

நீங்கள் தாயாகிட வேண்டுமா?

# தீபம்

### உங்களுக்கு உதவும்.....

ஒவ்வொரு பெண்ணுக்கும் தாய்மை என்பது உன்னதமான ஒரு அனுபவமாகும், எவ்வளவுதான் சொன்னாலும் அந்த அனுபவம் வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. தாய்மை அடைய ஏங்கும் பெண்ணுக்கே அதன் வலி தெரியும்.

எங்களின் தேர்ந்த மருத்துவர்கள் சில முதற்கட்ட பரிசோதனைகளை செய்து நீங்கள் கருத்தரிக்க பிரச்சினைகளை பொறுத்து உங்களுக்கான சிகிச்சையினை துவங்குவார்கள். மருத்துவருடன் நீங்கள் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கும் போது உங்களின் குழந்தைக்கனவு நனவாகும் வாய்ப்பு அதிகமாகின்றது.

“தீபம் அப்படி ஏங்கும் ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் ஒளி விளக்கேற்றுகிறது.”



நீங்கள் கருத்தரிக்க முயன்றும் இயலாது போனாலோ, இது வரை கருத்தரிக்க வில்லை என்றாலோ, உடனே எங்களை அணுகுங்கள்.

## கருத்தரிப்பு மையத்தின் சிகிச்சைகள்

கர்ப்பமடையவேண்டிய பெண்ணின் முழு வளர்ச்சியடைந்த முதிர்ந்த, முட்டை களையும் அவரது கணவருடைய விந்தணுக்களோடு இணைத்து எங்களின் உலகத்தரம் வாய்ந்த ஆய்வகத்தில் கருவாக வளர்த்தெடுத்து, கருவை பெண்ணின் கர்ப்பப்பைக்குள் உட்செலுத்துவதாகும் இந்த **IVF-ET**

### இந்த சிகிச்சை முறை யாருக்கு அவசியம் தேவை?

- கருக்குழாய் அடைப்பு ஏற்பட்டுள்ளவர்கள்.
- ஆண் விந்தணுக்களில் வித்தியாசமான மாற்றம் உள்ளவர்கள்.
- காரணமில்லாத கருத்தரிக்க இயலாமை.
- மரபணு சார்ந்த நோய் பாதிப்பு உள்ளவர்கள் அதன் மூலம் ஏற்கனவே கருச்சிதைவு ஆனவர்கள்
- பெண்ணிற்கு முட்டைகள் உருவாகாமல் இருப்பது வயதோ அல்லது மற்ற பல காரணங்களாலோ




## ICSI



இது அதிக அளவில் விந்தணு குறைபாடு உள்ள தம்பதியருக்காகவே பரிந்துரைக்கப்படும் சிகிச்சையாகும். இது ஐ.வி.எஃப் சிகிச்சையோடு சேர்ந்து செய்யப்படும் ஒரு முறையாகும், கருத்தரித்தலுக்காக ஒரு விந்தணுவை நேரடியாக கருமுட்டையில் ஊசியின் மூலம் செலுத்துவதாகும். எங்களுடைய அனுபவம் இங்கு கை கொடுக்கும்.

## IMSI



இது துணை கரு உருவாக்க மருத்துவத்தில் பலன் தரும் சிகிச்சை முறையாகும். இந்த சிகிச்சையில் உபயோகப்படுத்தும். விந்தணுவானது நுண்ணோக்கியின் மூலம் 7200 மடங்கு பெரிதாக்கப்பட்டு தேர்தெடுக்கப்படுவதால், அதிக அளவு பலன்கள் இருக்கும். இதில் கருச்சிதைவு சதவீதம் மிக மிகக் குறைவு, இது ஐ.வி.எஃப் / ஐ.சி.எஸ்.ஐ தோல்வி ஏற்பட்டால் இதனை தேர்தெடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

## கருத்தரிப்பு மையத்தின் சிகிச்சைகள்


### கருவாக்குதல்



எங்கள் ஆய்வகத்தில் நேர்த்தி செய்யப்பட்ட விந்தணுவையும் சேகரித்த முட்டையினையும் இணைத்து அதற்கான குடுவையில் வைப்பார்கள். அடுத்தநாள் அது கருவாக உருவானதை பரிசோதித்து அவற்றை அதற்கான திரவத்தில் இட்டு இன்குபேட்டரில் பாதுகாப்பார்கள்.

### பிளாஸ்டோசிஸ்ட் (Blastocyst)

> “ இது அதிகபட்ச வெற்றியினை தருவதாக சமீபத்திய ஆய்வுகள் சொல்கின்றன ”



வளர்ச்சியடைந்த 3 ம் நாள் அல்லது 5 ம் நாள் கருவை கருப்பையினுள் செலுத்தவார்கள். சிலவற்றை தம்பதிகளின் விருப்பத்திற்கேற்றவாறு உறைநிலையில் சேமிப்பார்கள்.
5 ம் நாள் கரு கூட்டமாக நன்கு வளர்ந்த செல்களாகத் தோன்றும். இதனை பிளாஸ்டோசிஸ்ட் என்று சொல்வோம்.


### கரு கர்ப்பப்பையில் செலுத்துதல் (Embryo Transfer-ET)



- இது 3 ம் அல்லது 5 ம் நாள் செலுத்தப்படும். கர்ப்பப்பையில் கருவை செலுத்துவது மிக எளிய சிகிச்சை முறையாகும். சுத்திகரிக்கப்பட்ட தனியறையில் செய்யப்படும். பெண்ணிற்கு மயக்கமருந்து தேவைப்படாது.
- பெண்ணுறுப்பு வழியாக கருப்பையில் கரு வைக்கப்படும். ஸ்கேன் மூலம் இது உறுதி செய்யப்படும். இது மிகவும் எளிய சுலபமான சிகிச்சை முறையாகும். மிக குறைந்த நேரமே இதற்காக தேவைப்படும்.
- கருவை கர்ப்பபையினுள் செலுத்தி முடிந்தவுடன் 15 நாட்கள் கழித்து B.HCG பரிசோதிக்கப்பட்டு கரு வளர்ந்ததை உறுதி செய்யப்படும்.
- இது பெண்ணின் மாதவிடாய் சுழற்சியின் 28 ம் நாளில் அறிந்து கொள்ளப்படும்.
- இதன் பின் 15 நாட்கள் கழித்து ஸ்கேன் பரிசோதனை மூலம் கரு கர்ப்பபையினுள் வளர்வதை உறுதி செய்யப்படும்.

## கருத்தரிப்பு மையத்தின் சிகிச்சைகள்

### IVF குறித்த உங்கள் பயங்கள் யாவும் தேவையற்றவை



சரியான சிகிச்சை மையத்தை தேர்ந்தெடுங்கள் மருத்துவர்களிடம் உங்கள் சிகிச்சை குறித்து உரையாடுங்கள். உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்த்துக்கொள்ளுங்கள். அவர்களோடு நீங்கள் மனம் விட்டு பேச வேண்டியது அவசியம். தீபம் மருத்துவமனையில் எங்கள் மருத்துவர்கள் உங்களுக்கு நம்பிக்கையூட்டி, உங்களை மனதளவிலும், உடலளவிலும் தயார் செய்வார்கள்.

### IUI



இது ஒரு வகை செயற்கை கருவூட்டல், கருவுறாமைக்கான சிகிச்சையின் செயல்முறை ஆகும். உறிஞ்சப்பட்ட மற்றும் செறிவூட்டப்பட்ட விந்தணு உங்கள் கருப்பையில் நேரடியாக உங்கள் கருவகம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முட்டைகள் வெளிப்படும் போது நீகழ்த்தபடும். பழைய வகை செயற்கை கருவூட்டல் விந்தையில் விந்தையை வைத்துள்ளது. இது எளிதானது என்றாலும், தற்போதைய செயல்முறையாக அது வெற்றிகரமாக இல்லை.

**தீபம்** மருத்துவமனை இதில் அதிகபட்ச வெற்றியினை கண்டிருக்கிறது.



## எங்களின் சிறப்பு அம்சங்கள்

> “தீபம் கருத்தரித்தல் மையம் 2012 ஆம் ஆண்டு முதல் வாழப்பாடியில் செயல்பட்டு வருகிறது.”

இங்கு சேலத்தில் முதல் முறையாக கர்ப்பப்பை உட்சுவர் (Endometrium Thickness) வளர்ச்சி இல்லாதவர்களுக்கும். குறைவாக இருப்பவர்களுக்கும். குறைவான கரு முட்டை மற்றும் விந்தணு இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



தீபம் கருத்தரித்தல் மையத்தின் சாதனைகள் கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாத பெண்ணிற்கு குழந்தை பாக்கியம்.



மாதவிடாய் நின்ற பெண்ணிற்கு குழந்தைப் பேறு



6 முறை வெளியே சோதனைக்குழாய் சிகிச்சை தோல்வி அடைந்தவர்களுக்கு தீபத்தில் இரட்டை குழந்தை பிறந்தது.

### நேர்த்தியான கவனிப்பு நம்பகமான நிபுணத்துவம்

16 years

உன்னத பூர்வமான சேவை

உயர்ந்த வெற்றி வீதம்

உயர் தரம் பெற்ற சிறப்பு மருத்துவர்கள்

அதி நவீன சாதனங்கள்

மறு உருவாக்க மருத்துவம்

குறைந்த கட்டணத்தில்

## பெண்களுக்கான சிகிச்சை

சேலம் தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை பெண்மை அழகியல் சிகிச்சையில் உயர் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை. இந்தியாவிலேயே மிகச்சில மருத்துவமனைகளில் மட்டுமே இந்த முறை சிகிச்சைகள் செய்யப்படுகின்றது. அவற்றுள் தீபம் மருத்துவமனையும் ஒன்று. இந்த உயர் பெண்மை அழகியல் சிகிச்சையில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களில் Dr. A. அகிலாம்பாள் அவர்களும் ஒருவர்.

பெண்மை அழகியல் சிகிச்சை என்பது மகளிர் மருத்துவம் மற்றும் அழகியல் அறுவை சிகிச்சையின் கூட்டாகும் இதில் பிறப்புறுப்பை வடிவமைத்தல், தேவைக்கு ஏற்றவாறு பிறப்புறுப்பு சரிசெய்தல், இறுக்கமாக்குதல், தளர்வுசெய்தல், தானாக சிறுநீர் வெளியேறுதலைத் தடுத்தல், வயதாவதால் ஏற்படும் பிரச்சனைகளை தாமதப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் இவை அனைத்தும் அடங்கும். லேசர் மூலம் உடலில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்குவதும் செய்யப்படுகிறது.

உங்களின் நம்பிக்கைக்குரிய துணை அழகியல் சிகிச்சைகள் மற்றும் மகளிர் மருத்துவத்தில் சிறப்புத்தகுதி பெற்றவர்களால் செய்யப்படுகிறது.

**வாருங்கள்! புதிய பெண்ணாய்ச் செல்லுங்கள்!**

### ஆலோசனை அணுகுமுறை
நாங்கள் உங்களின் உண்மையான தேவையினை கண்டறிந்து அதற்கான தீர்வினை பரிந்துரை செய்கிறோம்.

### முழு வெளிப்படத்தன்மை
நாங்கள் முழு வெளிப்படத் தன்மையோடு எங்களின் சிகிச்சை முறையினை நோயாளிகளுக்கு விளக்கிடுவோம்.

### சான்றளிக்கப்பட்ட அழகியல் மருத்துவர்கள்
திறமைகள் நிரூபிக்கப்பட்ட, மருத்துவர்கள்.

### 16 வருட மருத்துவ சேவை அனுபவம்
எங்களுக்கு 16 வருட தரமான மருத்துவ சேவை பாரம்பரியம் மாறாமல் உள்ளது.

### உலகத்தரம் வாய்ந்த அறுவை சிகிச்சை வசதிகள்
மிக நவீனமான அறுவை சிகிச்சைகள், தரமான வசதிகள் துணையோடு.

# பெண்களுக்கான சிகிச்சை



## பெண்ணுறுப்பு அறுவை சிகிச்சை

இது மிக சாதாரணமாக செய்யப்படும் ஒரு அறுவை சிகிச்சை ஆகும். இதன் மூலம் பெண்ணுறுப்பு வெளி உதடு சீரமைத்தல் மூலம் உங்களை, அது தேவையில்லாமல் உராய்வதன் மூலமாக ஏற்படும் வலியிலிருந்து விடுதலை செய்கிறது. நீங்கள் எந்த வலியும் இல்லாமல் பைக் ஓட்டி செல்லலாம் உங்கள் தாம்பத்திய வாழ்வினை மகிழ்ச்சியுடன் தொடரலாம். மேலும் அரிப்பு, எரிச்சல் மற்றும் அதைபற்றிய எண்ணங்கள் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு முழமையான விடுதலை.



## சிறுநீர் தானாக வெளியேறுதலுக்கான சிகிச்சை

இந்த சிகிச்சை பக்கவிளைவுகள் இல்லாத மிகக்குறைந்த நேர சிகிச்சையாகும். 90% நோயாளிகள் இந்த பிரச்சினையிலிருந்து முழுமையாய் தீர்வு கண்டிருக்கிறார்கள். 80% நோயாளிகள் டயாப்பர் உபயோகித்தலிருந்து வெளிவந்திருக்கிறார்கள். பெண்ணுறுப்பில் வறட்சி ஏற்படுதலால் அவதிப்பட்டவர்கள் அதிலிருந்து முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள்.



## G-ஸ்பாட் மேம்படுத்துதல்

பெண்களின் பிறப்புறுப்பின் உட்பக்க சுவரில் ஒரு மேட்டினை ஏற்படுத்துவதே இந்த சிகிச்சையின் முக்கிய நோக்கம். இது உடலுறவின் போது அதிக அளவு உராய்வினால், மேம்பட்ட இன்பத்தினை வழங்கிடும்.

இந்த முழு சிகிச்சையும் 15 நிமிடங்களில் முடிந்துவிடும். உங்கள் தாம்பத்திய வாழ்க்கையை இன்பத்தின் உச்சநிலைக்கு கொண்டு செல்லும் உன்னத சிகிச்சை இது.



## O-ஷாட் (O Shot)

இது தாம்பத்ய வாழ்வில் ஆசையின்மை, உச்சநிலை அடைவதில் சிரமம், கிளர்ச்சியடைவதில் பிரச்சனை மற்றும் வலியுடன் கூடிய உடலுறவு போன்றவற்றால் கஷ்டப்படும் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். எங்களின் O-ஷாட் சிகிச்சையின் மூலம், பெண்கள் இந்த குறைபாட்டிலிருந்து தீர்வு பெறமுடியும்.

# பெண்களுக்கான சிகிச்சை



## கிளிட்டோரிஸ் தோல் நீக்கம் செய்தல்

கிளிட்டோரிஸ் தோல் நீக்கம்! எக்டெண்டாட் சென்ரல் வெட்ஸ் ரிசெக்சன் தொழில் நுட்பம் மூலம் செய்யப்படுகிறது. இதன் மூலம் திருப்தியடைந்த பெண்களின் சராசரி விகிதம் 92% ஆகும். இந்த சிகிச்சை மேற்கொண்ட பெண்கள் தங்கள் பிறப்புறுப்பின் சீரற்ற அமைப்பால் வலியை உணர்ந்தவர்கள். அதிலிருந்து விடுதலை, பிறப்புறுப்பை அழகியல்யோடு மாற்றியமைத்தல் மற்றும் தாம்பத்ய வாழ்க்கையில் முன்னேற்றமான செயல்பாடு ஆகியவற்றை பலனமாக அடைந்தவர்கள். பெரும்பாலான பெண்கள் தங்கள் சுய மரியாதை மேற்பட்டதாக உணர்ந்தார்கள்.



## வெஜினிஸ்மஸ்ஸீக்கு போட்டாக்ஸ் மூலம் தீர்வு

போட்டாக்ஸ் சுருக்கங்கள் நீக்க மட்டும் உபயோகப்படுத்துவதல்ல தற்போது அது பெண்ணுறுப்பு சம்மந்தமான பல பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகிறது. வெஜினிஸ்மஸ் உட்பட இவை பெண்ணுறுப்பையும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் வலியையும் வேதனையையும் தருபவை வேஜினிஸ்மஸ் ஏற்படும் ஒரு தசைப்பிடிப்பு போன்ற ஒரு நிலையாகும் அதனால் உடலுறவு கொள்வதோ பெண்ணுறுப்பு பரிசோதனை செய்வதோ மாதவிடாய் டாம்ஃபோன்கள் வைப்பதோ மிகவும் வலியை உண்டாக்கும். போட்டாக்ஸ் நீண்ட நாள் தசை இளக்கியாக செயல்படுகிறது முகத்தில் வயதான அறிகுறிகள் தடுக்க தசைப்பிடிப்புகள் மற்றும் வெஜினிஸ்மஸ்ஸீக்கும் பாதிக்கப்பட்ட தசைபகுதியில் நேரடியாக மெல்லிய ஊசி மூலம் செலுத்தப்படுகிறது அது பிடிப்பு ஏற்பட்டிருக்கும் தசைகளை தற்காலிகமாகத் தளர்த்தி அவைகளை இயங்கவிடாமல் செய்துவிடுகிறது. தசைப்பிடிப்பின் அளவினையும் எத்தனை தசைப்பகுதிகள் வெஜினிஸ்மஸ்ஸினால் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை பொறுத்தே போட்டாஸின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. பொதுவாக ஒரு முறைதான் இந்த சிகிச்சை நடைபெறும் அது நான்கு முதல் ஆறு மாதங்கள் வரை செயல்படும் இது மிகவும் பாதுகாப்பான சிகிச்சை முறையாகும் குறைப்பிரசவமோ குழந்தை குறைபாடுகளுடன் பிறப்பதோ இதுவரையில் இல்லவே இல்லை.


## பிலீங்



இந்த சிகிச்சை தோலின் மேற்பரப்பினை பளபளப்பாக்கவும், மிருதுவானதாக்கவும், கருமையை நீக்கவும் உபயோகப்படும். இந்த ரசாயனக்கலவைகளின் நோக்கம் மேல்பரப்பில் இருக்கும் தோலினை அடியோடு மாற்றுவதுதான். இறந்த திசுவானது உரிந்துவிடுகிறது. புது திசுக்கள் உருவாகி தோலினை மெருகுறச்செய்கின்றன.


புதிதாக உருவான தோல் பழைய தோலைவிட மென்மையாகவும். குறைவான சுருக்கங்களோடும், இருக்கும்.

# அறுவை சிகிச்சைகள்




## மயோமெக்டமி

மயோமெக்டமி என்பது கர்ப்பபையில் உள்ள நல்ல நிலையில் இருக்கும் திசுக்களை விட்டுவிட்டு நார்த்திசுக்கட்டிகளை மட்டும் அகற்றும் சிகிச்சையாகும். குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பும் மற்றும் கர்ப்பப்பையினை அகற்ற விரும்பாத பெண்களுக்குமான சிறந்த சிகிச்சையாகும். இது பெண்ணுறுப்பு வழியே செய்யப்படும் சிகிச்சையாகும். கர்ப்பபையை காப்பாற்றி திசுக்கட்டிகளை நீக்கிட சரியான சிகிச்சையாகும். சிறிது நேரமெடுக்கக்கூடிய அதே நேரம் பாதுகாப்பான சிகிச்சையாகும்.



## ஹிஸ்ட்ரோஸ்கோபிக் பாலிபெக்டமி


இது கர்ப்பபையினை காப்பாற்ற அதிலுள்ள சதை கட்டிகளை கர்ப்பப்பைக்கு சேதமில்லாமல் அகற்றும் சிகிச்சையாகும். இந்த சதை கட்டிகள் மாதுளை முத்துக்களை போலவோ அல்லது அதைவிட பெரிதான அளவிலோ கர்ப்பபையின் உட்புற சுவரில் இருப்பவை. இவை கேன்சர் அல்லாத கட்டி வகையினை சேர்ந்தவை. இந்த சிகிச்சை அதிக நேரம் எடுத்துக்கொள்வதை, மிக, மிகஅளவு குறைவான திறப்புமூலம் செய்யப்படும் சிகிச்சையாகும். அடி வயிற்றுப்பகுதியில் வெட்டோ, தையல் போடா வேண்டிய தேவையோ இருக்காது.



## ஓவரியன்சிஸ்டெக்டமி


பெண்ணின் கருவகமானது கரு முட்டைகளை உருவாக்குகிறது. இந்த முயற்சி தடைபடும் போது கட்டிகள் உருவாகின்றன. கருவக கட்டிகள் பொதுவாக பெண்களிடையே ஏற்படுபவை. அனைத்து வயதினருக்கும் இது ஏற்படும் வாய்ப்பு உண்டு. இவற்றுள் சில தானாக கரைந்து விடும் தன்மைகொண்டவை. சில மட்டுமே அறுவை சிகிச்சை தேவைப்படுபவை. இவை பொதுவாக லேப்ராஸ்கோப்பிக் ஓவரியன் ஸிஸ்டெக்டமி என்று அழைக்கப்படுகிறது. மகப்பேறு மருத்துவர்களாலேயே செய்யப்படும் சுலபமான அறுவை சிகிச்சையாகும் இது.

# அறுவை சிகிச்சைகள்





## அடிசியோலைசிஸ்

இது ஒரு அறுவை சிகிச்சை ஆகும். இது உடலின் உட்புறம் உருவாகும் திசு ஓட்டுகளை பிரிக்கவோ அல்லது முழுவதுமாக நீக்கவோ செய்யப்படும். அதன் மூலம் அந்த உறுப்பின் செயல்பாடு மீட்டெடுக்கப்படும், நோயாளியின் வலி நீங்கும். சில ஒட்டு திசுக்கள் காயம் ஆறும் போதும் தோன்றலாம். இன்றும் சில காயத்தின் / அந்த பாகத்தை (அ) வடுவை விட பெரியதாக இருக்கலாம். இது அந்த காயத்தோடு பிணைந்து நோயாளிக்கு வலி ஏற்படுத்தலாம் இது கரு உருவாக்க சிகிச்சையில் முக்கிய பங்கு வகிக்கிறது.



## கருப்பை பிரிவு அறுவை சிகிச்சை

குழந்தை பிறப்பு இல்லாத பெண்கள், அதிலும் பிளவு பட்ட கருப்பை இருக்கும் பெண்களுக்கு ஸ்டிரோஸ்கோபிக் செப்டல் ரீசெக்ஸன் மிகவும் பயன் தரக்கூடிய ஒன்றாகும். பிளவுபட்ட கருப்பை ஒரு பிறவி குறைபாடாகும். ஒரு மெலிதான ஜவ்வு போன்ற ஒன்று கருப்பையை முழுவதுமாகவோ, பாதியாகவோ முடி இருக்கும். இதற்கு செப்டம் என்று பெயர். இதனால் கருவுருவதில் அந்த பெண்ணுக்கு எந்த ஒரு பாதிப்பும் இருக்காது ஆனால் குழந்தை பிறப்பை இது பாதிக்கும் சாத்தியங்கள் அதிகம். பிரிவுள்ள கருப்பை என்பது பிறவிக் குறைபாடாகும். கருப்பை இரண்டு குழியாக பிரிந்து இருக்கும். இந்த பெண்களுக்கு தொடர் கருச்சிதைவு நடை பெற வாய்ப்புகள் அதிகம். அறுவை சிகிச்சை மூலம் இதனை நீக்கும் போது குழந்தை பிறப்பு சாத்தியக்கூறுகள் அதிகமாகின்றன.



## சேலத்தில் முதல் முறையாய் ஆண்களுக்கு மட்டும் ப்ரத்யேகமாய்



சேலத்தில் முதன் முறையாக ஆண்கள் பாலியல் பிரச்சனைகளை சரி செய்யும் விதமாக புகழ் பெற்ற சேலம் தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆண்களுக் கென்றே தனிப்பட்ட மருத்துவ சிகிச்சை மையத்தினை துவங்குகிறது.

ஆண்களின் அனைத்து பாலியல் பிரச்சினைகளுக்கும் எங்களிடம் தீர்வு உண்டு.


சுலபமான வாழ்க்கை முறை மாற்றம் முதல், மாத்திரை, மருந்துகள் எடுத்துக்கொள்ளுதல், பலூன் சிகிச்சை, அறுவை சிகிச்சை என பலவும் உங்கள் பிரச்சினையின் தன்மைக்கேற்ப பரிந்துரைக்கப்படும்.

எங்கள் சிறப்பு மருத்துவர்களின் சிகிச்சை உங்கள் தாம்பத்ய வாழ்வில் சந்தோஷம் திரும்பிடச்செய்யும்.

## விறைப்பு தன்மை குறைபாடு

இதற்கான காரணங்கள் பல உண்டு. வயதாகுதல், உடல் தளர்ச்சி, மற்ற நோய்களுக்கு எடுத்துக்கொள்ளும் மருந்துகளின் பக்க விளைவு, மேற்புற காயம், மன அழுத்தம். குடிப்பழக்கம், புகை பிடித்தல் போன்றவை. நீங்கள் இதற்கு முதலில் எங்கள் சிறப்பு மருத்துவரை அணுகி இது பற்றி தெரிந்து கொள்ளவேண்டும்.

இதற்கான சில பிரத்யோக பரிசோதனைகள் உண்டு. முதலில் உங்களுடைய மருத்துவ மற்றும் பாலுறவு பற்றிய அனைத்தையும் அறிந்து கொள்ள மருத்துவர் உங்களிடம் கேள்விகள் கேட்பார். அதன் மூலமே இது உங்களுக்கு ஏற்படுவதற்கான காரணத்தை அறிந்து கொள்ள முயல்வார். உங்களது உறுப்பினை பரிசோதித்து அதன் இயல்பு தன்மை பற்றி அறிந்து கொள்வார். உங்கள் நாடி துடிப்பு, இரத்த அழுத்தம், இதய துடிப்பு ஆகியவற்றை பரிசோதித்து அறிந்துகொள்வார். பிறகு இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனையும் நடக்கும். இதன் மூலம் இதன் ஆரம்பம் தெளிவாய் அறிந்து கொள்ளப்படும். அதன் முடிவுகளை பொறுத்தே உங்களுக்கு சிகிச்சை பரிந்துரைக்கப்படும்.







## சர்க்கரை நோயினால் ஏற்படும் விறைப்புத்தன்மை குறைபாடு



சர்க்கரை நோய் விறைப்பு தன்மை குறைபாடு ஏற்பட முக்கியமானதொரு காரணமாகும். இதன் காரணமாக சர்க்கரை நோயாளிகள் தாம்பத்திய வாழ்வில் போதுமான ஈடுபாட்டினை இழக்க நேரிடலாம், சர்க்கரை நோயினால் ஏற்படும் நரம்பு கோளாறோ, விந்து குழாய் குறைபாடோ, அணுறுப்பிற்கு இரத்தம் எடுத்துச்செல்லும் குழாய்களில் குறைபாடோ மன அழுத்தமோ அதன் மூலம் பாலியல் ஹார்மோன்கள் சரியாக சுரக்காததோ இந்த குறைபாட்டினை ஏற்படுத்த காரணமாக இருந்திருக்காலம். நோயாளியின் சமூக நிலைப்பாடு, பொருளாதார நிலைமை ஆகியவையும் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

எங்கள் சிறப்பு மருத்துவர்களுடன் இந்த குறை பாட்டினை பகிர்ந்து கொள்ளுங்கள். சர்க்கரை நோயினை கட்டுக்குள் வைப்பது எப்படி என்பது பற்றி அவர்கள் ஆலோசனை சொல்வார்கள். உங்களின் மற்ற குறைபாடுகளையும் பகிர்ந்து கொண்டு ஆலோசனையும் தகுந்த மருத்துவ சிகிச்சையும் பெற்றிடுங்கள்.

எங்கள் மருத்துவர்களின் சிறப்பு சிகிச்சை உங்கள் வாழ்வினில் மீண்டும் வசந்தத்தை வரவழைக்கும் விந்து முந்துதல் (அ) விந்து சீக்கிரம் வெளியேறுதல். உடலுறவில் மிகச்சீக்கிரமாகவே விந்து வெளிவருதல் தம்பதிகள் இருவருக்கும் மனவருத்தத்தையும், இல்வாழக்கையில் விரைவிலேயே வெறுப்பையும் ஏற்படுத்தலாம். உடலுறவு ஆரம்பித்த ஒரு நிமிடத்திலேயே முடிந்து விடுவது மிகவும் பிரச்சினையான ஒன்று. ஆண்களில் 30% - 40% பேர்களுக்கு அவர்கள் வாழ்வில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இந்த குறைபாடு ஏற்படுகிறது.

எங்கள் சிறப்பு மருத்துவர்கள் உங்களுக்கான தீர்வினை அளிப்பார்கள்.

முதலில் எங்கள் சிறப்பு மருத்துவர்களை அணுகி, உங்கள் பிரச்சினையினை விளக்கமாக சொல்லுங்கள். உங்களுக்கு ஏற்படும் மனஅழுத்தம், சோர்வு, குற்றவுணர்வு, செயல்பாடு குறித்த சந்தேக மனநிலை மேலும் விறைப்பு தன்மை குறைபாட்டினால் கூட இந்த பிரச்சினை ஏற்படலாம்.





# ஆண்கள் சிறப்பு சிகிச்சை மையம்



எங்கள் மருத்துவர் உங்களை பரிசோதித்து, கேள்விகள் மூலம் இன்னும் தெளிவாக புரிந்து கொண்டு இதற்கான தீர்வினை அளிப்பார்கள்.

ஒரு மனவியல் மருத்துவரோடு பேசச் செய்வது, சில மருந்துகள் பரிந்துரைப்பது, சில பயிற்சிகள் செய்வது என தீர்வுகளை பரிந்துரைப்பார்கள்.

எங்கள் சிறப்பு மருத்துவர்கள் உங்கள் பிரச்சினையை தீர்த்து வைத்து உங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் சந்தோஷம் மலரச்செய்வார்கள்.

ஆண்களுக்கான அனைத்து பாலியல் பிரச்சனைகளுக்கும் எங்கள் சிறப்பு மருத்துவரை அணுகி அதற்கான தீர்வினை பெற்றிடுங்கள்.

மற்றும் ஆண்களுக்கான அனைத்து பாலியல் குறைபாடுகளுக்கும் நாங்கள் சிகிச்சையளித்து தீர்வினை அளிக்கிறோம்.

தீபம் ஆண்கள் சிறப்பு மருத்துவமனைக்கு வாங்க! தாம்பத்திய வாழ்வில் சந்தோஷத்தை மீட்டெடுங்க!!

| | |
|---|---|
| பால்வினை நோய்கள் | ட்ரிக்கோமோனியோசிஸ் |
| ப்ரோஸ்டேட் புற்றுநோய் | ஆணுறுப்பு குறைபாடுகள் |

## PESA

Percutaneous epididymal sperm aspiration (PESA) இது ஊசி மற்றும் சிரிஞ் மூலம் செய்யப்படும் ஒரு பரிசோதனை ஆகும். இதில் ஊசி நேரடியாக விந்து குழாயிலேயே செலுத்தப்படும். ஒரு மிக மெலிதான ஊசி செருகப்பட்டு விந்து எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்படும் ICSI சிகிச்சையில் ஊசியில் செலுத்தவும் இதே முறையில் விந்து எடுக்கப்படும். விந்து வெளியேறுதல் குறைபாடுள்ள நபரிடமிருந்து சுலபமாக விந்து எடுக்க இதுவே சிறந்த முறை எனஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது நுண் அறுவை சிகிச்சை மூலம் விந்து சேகரித்தலை விட இது சுலபமான முறையாகும்.

## TESA

TESA விதை பையிலிருந்து விந்து சேகரித்தல். ஒரு சிரிஞ்சில் ஊசியை பொருத்தி அதை விதை யையின் வழியாக உட்செலுத்தி, விதைகளிலிருந்து திரவத்தை உறிஞ்சுதல். TESA சிகிச்சை விந்தணு குறைபாடு உள்ளவர்களுக்கு ஏற்ற சிகிச்சை ஆகும். இவர்களுக்கு விந்து குழாயில் விந்தணு இருக்காது, இது நேராக விதைகளிலிருந்து விந்துவை எடுக்கும் வழிமுறை ஆகும். விதைபையில் எப்போதும் விந்து இருக்கும் வாய்ப்புகள் அதிகம். நோயாளி மயக்க மருந்து செலுத்தப்பட்டு மையத்தில் இருக்கும் போது அவருடைய விதை பையிலிருந்து திரவம் சேகரிக்கப்படும் அது பரிசோதனை கூடத்திற்கு அனுப்பப்பட்டு மேலும் பரிசோதனைகள் செய்யப்படும்.

# தீபத்தின் சாதனைகள்



வாழப்பாடி தீபம் டெஸ்ட் டியூப் பேபி சென்டர் சாதனை

திருமணமாகி 12 ஆண்டுகளுக்குப்பிறகு ஆண் குழந்தையை பெற்றெடுத்த பெண்



சேலம் தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில்

குழந்தைகள் தின விழா





வாழப்பாடி தீபம் பேபி சென்டரில்

கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாத பெண்ணுக்கு நவீன சிகிச்சை மூலம் குழந்தை



தீபம் ஸ்பெஷாலிட்டியில் டெஸ்ட்டியூப் மூலம் இரட்டை குழந்தை



குழந்தைகள் தின விழா



திருமணமாகி 12 ஆண்டுக்கு பின் டெஸ்ட் டியூப் முறையில் குழந்தை



தீபம் ஸ்பெஷாலிட்டியில் டெஸ்ட்டியூப் மூலம் இரட்டை குழந்தை


# உள் கட்டமைப்பு












# உள் கட்டமைப்பு
















## தீபம் மருத்துவமனையால் பயனடைந்தவர்கள்



### சில மாதங்கள் சிகிச்சை

எனது பெயர் மஞ்சுளா.
எனது கணவர் பெயர் செந்தில்குமரன்.
எங்களுக்கு திருமணமாகி 15 வருடங்களாக குழந்தை இல்லை. தீபம் மருத்துவமனையில் சில மாதங்கள் சிகிச்சை எடுத்த பின்னர் எங்களுக்கு ஒரு பெண் குழந்தை (சௌபர்ணிகா) பிறந்தது. நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். தீபம் மருத்துவமனையின் மருத்துவர்கள் எங்களுக்கு கடவுள் மாதிரி.

### நன்றாக சிகிச்சை அளிக்கிறார்கள்



எனது பெயர் பாப்பாத்தி
எனது கணவர் பெயர் பரமசிவம்.
எங்களுக்கு திருமணமாகி 8 வருடங்களாக குழந்தை இல்லை. தீபம் மருத்துவமனையில் சில மாதங்கள் சிகிச்சைக்கு பின் எங்களுக்கு குழந்தை பிறந்தது. இங்கு மிகவும் நன்றாக சிகிச்சை அளிக்கிறார்கள். தீபம் மருத்துவமனைக்கு எங்களது நன்றியை தெரிவித்து கொள்கிறோம்!

## தீபம் மருத்துவமனையால் பயனடைந்தவர்கள்



### என் குல தெய்வம்

எனது பெயர் ஜெயக்கொடி
எனது கணவர் பெயர் கோவிந்தன் எனக்கு இரத்த அழுத்தம் (BP), சர்க்கரை (Sugar), கர்ப்பபை கட்டி போன்ற பிரச்சனைகள் இருப்பதால் எனக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்று பல மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். பின்பு தீபம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து எனக்கு குழந்தை பிறந்துள்ளது. அதனால் தீபம் மருத்துவமனையின் மருத்துவர்கள் எங்களது குல தெய்வம் என்றே கூறுவோம்.
தீபம் மருத்துவமனைக்கு நன்றி.

### என் தாய்



எனது பெயர் கன்னியம்மாள்
எனது கணவர் பெயர் முருகேசன்
எங்களுக்கு 12 வருடங்களாக குழந்தை இல்லை என்பதால் எனது உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் அனைவரும் ஏளனமாகபேசினார்கள். எனது தாய் கூட எனக்கு உறுதுணையாக இல்லை. அதனால் நான் மண உழைச்சலுக்கு ஆளானேன். அதற்கு பிறகு எனது உறவினர்கள் அனைவரும் எனது கணவருக்கு இரண்டாவது திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். அவர்கள் மட்டுமல்லாமல் பல மருத்துவர்களும் கூட எனது கணவருக்கு இரண்டாவது திருமணம் செய்து வைக்குமாறு கூறினார்கள். பிறகு தீபம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்தேன். சிகிச்சையின் போது எனது கர்ப்பபை 3cm மட்டும் இருந்தது என்பது தெரிந்தது. சிகிச்சைக்கு பிறகு எனது கர்ப்பபை 7cm வளர்ந்தது. பிறகு எனக்கும் தாய்மை வரம் கிடைத்தது. அழகானஆண் குழந்தை பிறந்தது. இப்பொழுது சமுதாயத்தில் மதிப்பும் மரியாதையுடனும் வாழ்கிறேன். என்னை பெற்ற தாய் கூட எனக்கு உறுதுணையாக இல்லாதபோது தீபம் மருத்துவமனையின் மருத்துவர்கள் எனது தாயாக இருந்து கவனித்துக் கொண்டனர். தீபம் மருத்துவமனைக்கு மிக்க நன்றி.




## 11
சிறப்பு துறைகள்

## சேலம்

- கருத்தரித்தல் மையம்
- தோல், நகம் மற்றும் முடிக்கான அழகியல் சிறப்பு சிகிச்சை
- மகளிர் அழகியல் சிறப்பு சிகிச்சை (Cosmetic Gynecology)
- கரு மருத்துவம் (Fetal Medicine)
- மறு உருவாக்க மருத்துவம் (Regeneative Medicine)
- பலதுறை பல் மருத்துவம்
- பிளாஸ்டிக் மற்றும் அழகியல் சார்ந்த அறுவை சிகிச்சை
- ஆண் நலம் மற்றும் பாலியல் மருத்துவம்
- வரிஸ்டிராஸ் கோப்பி மற்றும் லேப்ரோஸ் கோப்பி சிகிச்சை
- மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவம்
- புற்றுநோய் அறுவை சிகிச்சைகள்

சர்வதேச சான்றிதழ் பெற்ற மருத்துவர்கள் | உலகத் தரம் வாய்ந்த அதி நவீன சிகிச்சைகள்




## மேலும் 13
துறைகள்

## வாழப்பாடி

- கருதரித்தல் மையம்
- பொது அறுவை சிகிச்சை
- வெரிஸ்டிராஸ் கோப்பி மற்றும் லேப்ரோஸ் கோப்பி சிகிச்சை
- மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவம்
- புற்றுநோய் அறுவை சிகிச்சைகள்
- சிறுநீரக கல் மற்றும் கட்டிகளுக்கான அறுவை சிகிச்சை
- பிளாஸ்டிக் மற்றும் அழகியல் சார்ந்த அறுவை சிகிச்சை
- காது, மூக்கு மற்றும் தொண்டை சிகிச்சைகள்
- மூட்டு மற்றும் எலும்பு முறிவு அறுவை சிகிச்சை
- மூளை மற்றும் நரம்பு தண்டுவட அறுவை சிகிச்சைகள்
- CT ஸ்கேன்
- 24X7 உயர்தர இரத்த பரிசோதனை மையம்
- 24X7 டிஜிட்டல் எக்ஸ்-ரே

தமிழக முதலமைச்சரின் காப்பீட்டு திட்டம், அரசு ஊழியர்கள் மற்றும் அனைத்து முன்னணி தனியார் நிறுவன காப்பீட்டு திட்டத்திற்கான அங்கீகாரம் பெற்ற மருத்துவமனை.

உயர்ந்த வெற்றி வீதம் | அதி நவீன சாதனங்கள்

# தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை

**டெஸ்ட் டியூப் பேபி சென்டர் & லேப்ரோ ஷிஸ்ட்ரோஸ்கோப்பிக் சென்டர்**


வாழப்பாடி: 2/1, கணபதி நகர், கடலூர் மெயின் ரோடு, வாழப்பாடி (அஞ்சல் & வட்டம்), சேலம் - 636 115.
சேலம்: 3/53, ஆர் ஆர் காம்ப்ளக்ஸ், திருச்சி மெயின் ரோடு, சீலநாயக்கன்பட்டி, சேலம் - 636 201.

**வாழப்பாடி: 97877 03400 | சேலம்: 97877 09400**

**Toll Free : +91 9943 900 600**

**Email : deepamhosvpy@gmail.com** **Web : www.deepamhospital.com**

## தீபம் ஸ்பெஷாலிட்டியில் டெஸ்ட்டியூப் மூலம் இரட்டை குழந்தை

சேலம், அக். 28–

சிலநாயக்கன்பட்டி, தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை நிர்வாக இயக்குனர் சுரேஷ்குமார், டாக்டர் அகிலாம்பாள் வெளியிட்டுள்ள அறிக்கை:

கோவை, பெங்களுரு, சென்னை, கடலூரர் உள்பட ஆறு மருத்துவமனைகளில், ஐ.வி.எப்., சிகிச்சை பெற்று தோல்வியடைந்த, 40 வயது பெண், எங்கள் மருத்துவமனைக்கு வந்தார். இதை, எங்கள் மருத்துவக்குழு சவாலாக ஏற்று, அப்பெண்ணுக்கு சிகிச்சையளித்தனர். அதன் பலனாக, டெஸ்ட்டியூப் மூலம், ஆண், பெண் என, இரட்டை குழந்தை பிறந்துள்ளது. மேலும், தம்பதி மிகுந்த மகிழ்ச்சியடைந்து, எங்கள் குழுவினருக்கு நன்றி தெரிவித்தனர்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளனர்.

28.10.2018
காலைக்கதிர்

### வாழப்பாடி தீபம் டெஸ்ட் டியூப் பேபி சென்டர் சாதனை

## திருமணமாகி 12 ஆண்டுகளுக்குப்பிறகு ஆண் குழந்தையை பெற்றெடுத்த பெண்

சேலம், ஜூன் 4-

சேலம்மாவட்டம்வாழப்பாடி தீபம் டெஸ்ட் டியூப் பேபி சென்டரில் திருமணமாகிகடந்த 12 ஆண்டுகளாக குழந்தை இல்லாத பெண்ணுக்குடெஸ்ட்டியூப் முறையில் அழகிய ஆண் குழந்தை பிறக்கவைத்து சாதனைபடைத்துள்ளனர்.

சேலம் மாவட்டம் ஆத்துார்பகுதியைச்சேர்ந்தவர்முருகேசன்என்பவரது மனைவி கன்னியம்மாள் (31). முருகேசன் விவசாய கூலித் தொழிலாளி. முருகேசனுக்கும்-கன்னயிம்மாளுக்கும்கடந்த2005ம்ஆண்டு திருமணமானது. கடந்த12 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம்இல்லாமல்இந்த தம்பதியர்தவித்துவந்தனர்.

பல்வேறு இடங்களில் நடந்தம்ருத்துவசோதனையில் மனைவி கன்னியம்மாள்சிறுவயதுமுதலேபருவம்அடையாதவர்என்பதும் திருணம் ஆனால் சரியாகிவிடும்என்றுகூறிதிருமணம் நடத்திவைத்ததும் தெரியவந்தது.இந்நிலையில்



குழந்தையுடன் டாக்டர் அகிலாம்பாள் சுரேஷ்குமார்

டெஸ்ட் டியூப் முறையில் குழந்தைபெற்றுக்கொள்ளலாம்என்றதகவல்கேள்விப்பட்டு கடந்த ஆண்டு வாழப்பாடிதீபம்டெஸ்ட் டியூப் பேபி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.நேற்றுவியாழக்கிழமைகாலைகன்னியம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. இது குறித்து வாழப்பாடிதீபம்டெஸ்ட் டியூப்பேபிசென்டர்நிர்வாக இயக்குனர் டாக்டர் அகிலாம்பாள்சுரேஷ்குமார் கூறியதாவது, டெஸ்ட்டியூப் மூலம்கருத்தரிக்கச்செய்வது என்பதுசோதனைக்குழாய் முறையில்உயிரணுவையும் கரு முட்டையையும் உடலிலிருந்து வெளியே எடுத்துசேகரித்துஆய்வகத்தில் ஒன்றாக்கி, பிறகு கருப்பைக்குள் செலுத்தி பதியமாக்கி கருத்தரிக்கச் செய்வோம்.

அவ்வாறு கருமுட்டையையும் உயிரணுவையும் ஒன்றாக்கி, கருப்பைக்குழாய், பெண்ணின் உடலுக்குள் செல்லும் செயலாகக முறையினை வெளியே ஆய்வகத்தில் செய்வது சோதனைக்குழாய் முறையில்கருவை, வளர்த்து குழந்தைபிறக்கவைப்பதே டெஸ்ட்டியூப்பேபிமுறை என்றுசொல்லப்படுகிறது. கருப்பைவளர்ச்சி இல்லாத பெண்களுக்கு முறையாக சிகிச்சை பெற்றால் பெண்களுக்குகுழந்தைபாக்கியம் என்பது கைக்கெட்டும் தூரத்திலதான் உள்ளது என்பதற்கு இன்று தீபம் டெஸ்ட்டியூப் சென்டரில் நிருபணம் ஆகி உள்ளது என்று கூறினார்.



### சேலம் தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில்

## குழந்தைகள் தின விழா

சேலம், நவ.16–

சேலம் சிலநாயக்கன்பட்டியில் உள்ள தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில், குழந்தைகள் பல் மருத்துவ பிரிவில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கினார். டாக்டர் அகிலாம்பாள் முன்னிலை வகித்தார். விழாவையொட்டி மருத்துவமனை சார்பில் எல்.கே.ஜி., யு.கே.ஜி., பள்ளி குழந்தைகளின் மாறுவேடப்போட்டி, 1 முதல் 5–ம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு ஓவியப்போட்டி, 6 முதல் 8–ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி என பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 சிறப்பு பரிசுகளும் கலந்து கொண்ட அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. விழாவில் சேலம் மாநகர போலீஸ் கமிஷனர் சங்கர் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் மருத்துவமனை டாக்டர்கள், ஊழியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

### வாழப்பாடி தீபம் பேபி சென்டரில்

## கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாத பெண்ணுக்கு நவீன சிகிச்சை மூலம் குழந்தை

வாழப்பாடி,ஜூன்.5–

சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியைச்சேர்ந்தவர் முருகேசன், விவசாய கூலித்தொழிலாளி. இவருடைய மனைவி கன்னியம்மாள்(வயது 31). இவர்களுக்கு கடந்த 2005–ம் ஆண்டு திருமணம் நடந்தது. இவர்களுக்கு கடந்த 12 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தது. பல்வேறு இடங்களில் நடந்த மருத்துவ சோதனையில் கன்னியம்மாள் சிறுவயது முதலே பருவம் அடையாதவர் என்பதும் திருமணம் ஆனால் சரியாகிவிடும் என்று கூறி திருமணம் நடத்திவைத்ததும் தெரிய வந்தது. 2015–ம் ஆண்டு முதல் கன்னியம்மாள் பருவம் அடையாதது குறித்தும், தனக்கு கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாத காரணத்தினால் குழந்தை பிறப்பு சாத்தியம் இல்லை என்று கூறியிருந்த கவலையில் இருந்தனர். நவீன சிகிச்சைகள் மற்றும் 'டெஸ்ட் டியூப்' முறையில் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறிந்து, கடந்த ஆண்டு வாழப்பாடி தீபம் டெஸ்ட் டியூப் பேபி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கன்னியம்மாளுக்கு ஆண்குழந்தை பிறந்தது.



கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாத பெண்ணுக்கு பிறந்த ஆண்குழந்தையுடன் டாக்டர் அகிலாம்பாள் சுரேஷ்குமார்.

இது குறித்து, வாழப்பாடி தீபம் டெஸ்ட் டியூப் பேபி சென்டர் நிர்வாக இயக்குனர் டாக்டர் அகிலாம்பாள் சுரேஷ்குமார் கூறும் போது," பருவம் அடையாத கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாத பெண்ணுக்கு அதுவும் திருமணமாகி 12 ஆண்டுகளுக்குப்பிறகு ஆண்குழந்தை என்பது நிச்சயம் அறிவியல் வளர்ச்சியின் வியத்தகு சாதனை என்றுதான் சொல்லவேண்டும். கர்ப்பப்பை வளர்ச்சி இல்லாத பெண்களுக்கு முறையாக சிகிச்சை பெற்றால் பெண்களுக்கு குழந்தை பாக்கியம் என்பது கைக்கு எட்டும் தூரத்தில் தான் உள்ளது என்பதற்கு தீபம் டெஸ்ட் டியூப் சென்டரில் நிருபணம் ஆகிஉள்ளது' என்றார்.



சேலம் தீபம் மருத்துவமனையில் நடந்த குழந்தைகள் தின விழாவில், காமராஜர் வேடமணிந்து முதல்பரிசு வென்ற குகை மழலையர் பள்ளி யு.கே.ஜி., மாணவன் த.அகிலனுக்கு மாநகர போலீஸ் கமிஷனர் சங்கர் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார். உடன், தீபம் மருத்துவமனை எம்.டி.சுரேஷ்குமார், டாக்டர் சசிகுமார், தீபக் ஆகியோர் உள்ளனர்.

## திருமணமாகி 12 ஆண்டுக்கு பின் டெஸ்ட் டியூப் முறையில் குழந்தை

சேலம், ஜூன் 3–

வாழப்பாடி, தீபம் டெஸ்ட் டியூப் பேபி சென்டரில், திருமணமாகி கடந்த, 12 ஆண்டுகளாக குழந்தை இல்லாத பெண்ணுக்கு, டெஸ்ட் டியூப் முறையில் அழகிய ஆண் குழந்தை பிறக்க வைத்து சாதனை படைத்துள்ளனர்.

ஆத்தூரை சேர்ந்தவர் முருகேசன் மனைவி கன்னியம்மாள், 31. கூலித்தொழிலாளி. இவர்களுக்கு திருமணமாகி, 12 ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்தனர். டெஸ்ட்டியூப் முறையில் குழந்தை பெற்று கொள்ளலாம் என்ற தகவல் கேள்விப்பட்டு, கடந்த ஆண்டு முதல் தொடர்ந்து, வாழப்பாடி தீபம் டெஸ்ட் டியூப் பேபி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையில், நேற்று முன்தினம் காலை, கன்னியம்மாளுக்கு ஆண் குழந்தை பிறந்தது.



டெஸ்ட் டியூப் மூலம் கருத்தரித்து பிறந்த ஆண் குழந்தையுடன் டாக்டர் அகிலாம்பாள்.

தீபம் டெஸ்ட் டியூப் சென்டர் நிர்வாக இயக்குனர் டாக்டர் அகிலாம்பாள் கூறுகையில், ''கருப்பை வளர்ச்சி இல்லாத பெண்களுக்கு, முறையாக சிகிச்சை பெற்றால் பெண்களுக்கு குழந்தை பாக்கியம் என்பது கைக்கெட்டும் தூரத்தில்தான் உள்ளது என்பதற்கு, இன்று தீபம் டெஸ்ட் டியூப் சென்டரில் நிருபணம் ஆகிஉள்ளது,'' என்றார்.



சீலநாயக்கன்பட்டி, தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் நடந்த குழந்தை தின விழாவில், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு, போலீஸ் கமிஷனர் சங்கர் பரிசு, சான்றிதழ் வழங்கினார்.

## குழந்தைகள் தின விழா

சேலம், நவ. 16–

சிலநாயக்கன்பட்டி, தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, குழந்தைகள் பல் மருத்துவ பிரிவில், குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டது.

அதில், சேலம் மாநகர போலீஸ் கமிஷனர் சங்கர், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு, பரிசு, சான்று வழங்கினார்.

இதுகுறித்து, மருத்துவமனை நிர்வாக இயக்குனர்கள் சுரேஷ்குமார், அகிலாம்பாள் கூறியதாவது:

எல்.கே.ஜி., – யு.கே.ஜி., குழந்தைகளுக்கு மாறுவேட போட்டி, ஒன்று முதல், 5ம் வகுப்பு வரையுள்ள குழந்தைகளுக்கு ஓவியம், ஆறு முதல், எட்டு வரை, பேச்சுப் போட்டி நடந்தது. ஒவ்வொரு பிரிவில், மூன்று சிறப்பு பரிசுகள், கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.


தீபம் ஸ்பெஷாலிட்டியில் டெஸ்ட்டியூப் மூலம் இரட்டை குழந்தை

சேலம், அக். 28–

சிலநாயக்கன்பட்டி, தீபம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை நிர்வாக இயக்குனர் சுரேஷ்குமார், டாக்டர் அகிலாம்பாள் வெளியிட்டுள்ள அறிக்கை:

கோவை, பெங்களுரு, சென்னை, கடலூரர் உள்பட ஆறு மருத்துவமனைகளில், ஐ.வி.எப்., சிகிச்சை பெற்று தோல்வியடைந்த, 40 வயது பெண், எங்கள் மருத்துவமனைக்கு வந்தார். இதை, எங்கள் மருத்துவக்குழு சவாலாக ஏற்று, அப்பெண்ணுக்கு சிகிச்சையளித்தனர். அதன் பலனாக, டெஸ்ட்டியூப் மூலம், ஆண், பெண் என, இரட்டை குழந்தை பிறந்துள்ளது. மேலும், தம்பதி மிகுந்த மகிழ்ச்சியடைந்து, எங்கள் குழுவினருக்கு நன்றி தெரிவித்தனர்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளனர்.